**தமிழ்நாடு தகவல் ஆணையம்**

எண்.2, தியாகராயர் சாலை, (ஆலையம்மன் கோயில் அருகில்), எல்டாம்ஸ் ரோடு சந்திப்பு
தேனாம்பேட்டை, சென்னை - 600 018. தொலைபேசி எண் 24347590

**ஆணை நாள்: 03.11.2020**

**முன்னிலை**

**திரு ச.செல்வராஜ், எம்.ஏ., பி.எட்.,**
**மாநில தகவல் ஆணையர்**

•••••••••

**வழக்கு எண்.SA 695/E/2019**

திரு.M.நாகராஜன் ... மேல்முறையீட்டாளர்

/ எதிர் /

பொதுத் தகவல் அலுவலர்/
தலைமையிடத்து துணை வட்டாட்சியர்,
வட்டாட்சியர் அலுவலகம்,
காரியாபட்டி வட்டம்,
விருதுநகர் மாவட்டம். ... பொது அதிகார அமைப்பு

******

**ஆணை**

மேல்முறையீட்டாளர் 13.02.2018 தேதியிட்டு தகவல் பெறும் உரிமைச் சட்டம், 2005, பிரிவு 6(1)-ன்கீழ் தாக்கல் செய்துள்ள மனுவில் காரியாபட்டி, அல்லிகுளம் கிராமம் பழைய (1963 ஆம் வருடம்) பைமாஷ் எண்.394/3 தற்போது UDR ன் அடிப்படையில் சர்வே எண்ணாக மாற்றப்பட்டுள்ளதா என்ற விபரம், சர்வே எண்.52/10ற்கான வரைபடத்தின் நகல், பொதுவாக குழி என்று அளவை கூறுகையில் 1 குழி என்பது எத்தனை செண்டாக கணக்கிடப்படுகிறது என்ற விபரம், சர்வே எண்.52/10ல் சப்-டிவிஷன் (Sub-Division) செய்யப்பட்டிருந்தால் அதன் விபரம் அடங்கிய நகல், பட்டா எண்.217ல் எத்தனை உரிமையாளர் இருந்தார்கள் என்பது குறித்த விபரம் அடங்கிய நகல் உள்ளிட்ட தகவல்களைக் கோரியதன்பேரில், பொதுத் தகவல் அலுவலர் 02.03.2018 தேதியிட்ட கடிதம் வாயிலாக வழங்கியுள்ள தகவல் தனக்கு திருப்தியளிக்கவில்லை என்று தெரிவித்து மேல்முறையீட்டாளர் 13.03.2018 தேதியிட்ட

சட்டப்பிரிவு 19(1)-ன்கீழான முதல் மேல்முறையீட்டு மனுவை மேல்முறையீட்டு அலுவலருக்கு அனுப்பி வைத்துள்ளார். தொடர்ந்து 22.01.2019 தேதியிட்ட சட்டப்பிரிவு 19(3)-ன்கீழான தனது இரண்டாவது மேல்முறையீட்டு மனுவை ஆணையத்திற்குத் தாக்கல் செய்துள்ளார்.

2. அந்த மனு தமிழ்நாடு தகவல் ஆணையத்தால் ஏற்றுக்கொள்ளப்பட்டு வரப்பெற்ற தேதியின் அடிப்படையில் காலவரிசை பட்டியலிட்டு விசாரணைக்கு எடுத்துக்கொள்ள வைக்கப்பட்டிருந்தது. இந்நிலையில் விருதுநகர் மாவட்டத்தில் பல மாதங்கள் ஆகியும் முழுமையான தகவல் வழங்கப்படாமல் நிலுவையில் இருந்து வந்த மேல்முறையீட்டாளர்களின் மனுக்களின் மீது மாநில தகவல் ஆணையர் அவர்கள், விருதுநகர் மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (பொது) அவர்களுடன் 29.09.2020 அன்று காணொலி காட்சி மூலம் விவாதிக்கப்பட்ட நிலையில், திருவில்லிப்புத்தூர் வட்டாட்சியர் அலுவலகப் பொதுத் தகவல் அலுவலர் 21.10.2020 தேதியிட்டு இவ்வாணையத்திற்கு அனுப்பியுள்ள கடிதத்தில், மேல்முறையீட்டாளர் கோரிய இனங்களுக்கான தகவல்களை 21.10.2020 அன்று அலுவலகத்திற்கு நேரில் வந்து பெற்றுக்கொள்ளுமாறு தெரிவித்து, மேல்முறையீட்டாளர் வராத காரணத்தினால், மேற்படி தகவல்கள் அடங்கிய 21.10.2020 தேதியிட்ட கடிதம் பதிவஞ்சலில் அனுப்பி வைத்துள்ளதாகத் தெரிவித்துள்ளார்.

3. ஆகவே பொதுத் தகவல் அலுவலர் அவர்களால் வழங்கப்பட்ட தகவல் மேல்முறையீட்டாளருக்கு கிடைக்கப் பெறவில்லையெனில் அல்லது திருப்திகரமானதாக இல்லையெனில், அது குறித்து இவ்வாணை கிடைக்கப் பெற்ற 30 தினங்களுக்குள், தனது கைபேசி எண்ணுடன், இவ்வாணையத்திற்கு தெரிவிக்குமாறு மேல்முறையீட்டாளருக்கு அறிவுறுத்தப்படுகிறது.

**ஒம்/- ச.செல்வராஜ்**
**மாநில தகவல் ஆணையர்**

**(ஆணையத்தின் ஆணைப்படி)**

**உதவிப்பதிவாளர்.**

**<u>வழக்கு எண்.SA 695/E/2019</u>**

பெறுநர்

**<u>பொது அதிகார அமைப்பு</u>**
பொதுத் தகவல் அலுவலர்/
தலைமையிடத்து துணை வட்டாட்சியர்,
வட்டாட்சியர் அலுவலகம்,
காரியாபட்டி வட்டம்,
விருதுநகர் மாவட்டம்

**<u>மனுதாரர்</u>**

திரு.M.நாகராஜன்,
த/பெ.முத்துக்கோனார்,
அல்லிக்குளம்,
சித்துமூன்றடைப்பு அஞ்சல்,
காரியாபட்டி தாலுக்கா,
விருதுநகர் மாவட்டம்.

Copy to: Judgement File.
*"VP / PA -06.11.2020"*